DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No.198 /2025 |
| Session | ... | |
| | | Prosecution / PW-4 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.சௌந்திரபாண்டியன் |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused absent.u/s 355 BNSS petition filed and allowed.)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 22.05.2026

---

**முதல் விசாரணை**

1. நான் தற்போது தொண்டி காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2025 ம் தேதி எனது காவல் நிலையத்தில் நாச்சியப்பன் என்பவர் சிறப்பு சார்பு ஆய்வாளராகவும், திரு,.முருகானந்தம் சார்பு ஆய்வாளராகவும் பணியாற்றி வந்தார்கள். சார்பு ஆய்வாளர் முருகானந்தம் பணி ஓய்வு பெற்று வெளியூரில் வசித்து வருவதாலும், சிறப்பு சார்பு ஆய்வாளர் நாச்சிய்யப்பன் மருத்து விடுப்பில் இருப்பதாலும் அவர்களால் இன்று நீதிமன்றத்திற்கு ஆஜராகி இயலவில்லை.

அவர்களின் கையெழுத்து எனக்கு நன்கு தெரியும் என்பதாலும் ஆவணத்தின் அடிப்படையிலும் அவர்களின் சார்பாக நான் இன்று சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 08.05.2025ம் தேதி காலை 11.30 மணியளவில் சிறப்பு சார்பு ஆய்வாளர் நாச்சியப்பன் நிலைய பொறுப்பில் இருந்தபோது தொண்டி ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து கிடைக்கபெற்ற தகவலை பெற்று 12.00 மணியளவில் மருத்துமவனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த சர்மிளாபானு என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தினை பதிவுசெய்து நிலையம் ஆஜராகி புகார் வாக்குமூலம் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.102/25u/s 296(b),118(1),351(3) BNS ஆக பதிவுசெய்துள்ளார்.புகார் வாக்குமூலம் அ.சா,ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா,ஆ.3 ஆகவும் குறியீடு செயய்ப்படுகிறது.

3. பின்னர் வழக்குகோப்பினை மேல்விசாரணைக்காக சார்பு ஆய்வாளர் பார்வைக்கு வைத்துள்ளார். வழக்குகோப்பினை தனது பார்வைக்கு எடுத்துகொண்ட சார்பு ஆய்வாளர் முருகானந்தம் அதே நாள் 18.30 மணியளவில் சம்பவயிடம்சென்று சாட்சிகள் சேக்அப்துல்லா, கலந்தர் சாதிக் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வைமகசர் , மாதிரி வரைபடம் தயார்செய்துள்ளார். **பார்வைமகசர் அ.சா.ஆ.4 ஆகவும் வரைபடம் அசா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் அதே நாள் 14.15 மணியளவில் செல்லம்மாள் என்பவரின் வீட்டின் முன்புவைத்து சாட்சிகள் சேக்அப்துல்லா, கலந்தர் சாதிக் ஆகியோர் முன்னிலையில் சம்பவத்திற்கு பயன்படுத்திய கத்தி ஒன்றை அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றியுள்ளார். அத்தாட்சி **அ.சா,.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4.பின்னர் வழக்கின் சாட்சிகளான சர்மிளாபானு, ஹபிபுல்லா, சிராசுதீன், காதர்மைதீன், பார்வைமகசர், அத்தாட்சி சாட்சிகளையும் தனி தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார்.,அவர்களின் விசாரணையிலும் சாட்சியங்களை விசாரணை செய்ததிலும் சம்பவயிடத்தை பார்வையிட்டதிலிருந்தும் குற்ற சம்பவம் உண்மையென தெரியவந்தது.

5.இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரியை தேடி வந்த நிலையில் 08.05.2025 ம் தேதி 15.30 மணியளவில் தொண்டி அனிஷ்நகரில் உள்ள எதிரியின் வீட்டின்அருகே வைத்து எதிரியை கைது செய்வதற்கான தக்க காரணம் கூறி சட்டப்படியான நடவடிக்கைகளை மேற்கொண்டு கைதுசெய்து தக்க நிலைய பிணையில் விடுவித்துள்ளார்., பின்னர் சம்பவயிடத்தில் இருந்த கைப்பற்றப்பட்ட வழக்குசொத்தினை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைப்பு செய்துள்ளார். படிவம் 91 அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது,. படிவம் 91ல் அடங்கிய கத்தி அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6.பின்னர் முதல்தகவல்அறிக்கை பதிவுசெய்த சிறப்பு சார்பு ஆய்வாளரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். வழக்கின் சாட்சிகளான சர்மிளாபானு, ஹபிபுல்லா, சிராசுதீன், காதர்மைதீன், ஆகியோர்களை மீண்டும் விசாரணை செய்து மறுவாக்குமூலம் பதிவு செய்துள்ளார்., பின்னர் அவர் விசாரணையை முடித்து கொண்டு எதிரி மீது அதே பிரிவுகளின் கீழ் குற்ற இறுதியறிக்கையை தாக்கல்செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. புகார்தாரர் அளித்த புகாரை சரிவர விசாரிக்காமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

2. வழக்காவணங்களும் வழக்கு சொத்துகளும் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கை சரிவர விசாரணை செய்யாமல் அவசர கதியில் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.